செ.வெ.எண்-61 நாள்-27.09.2019

# அரியலூர் மாவட்டத்தில் மாண்புமிகு அரசு தலைமைற்கொடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இஆப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் ஆகியயோர்கள் முன்னிலையில் இன்று (27.09.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த குடிமராமத்து திட்டப்பணிகள் சிறப்பாக நடைபெறுவது குறித்தும், இப்பணிகள் அனைத்தும் பாசனத்தாரர்கள் சங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன் முடிக்கப்படும். மேலும், நீர் ஆதாரங்களை பாதுகாக்க கிராமப்புறங்களில் உள்ள குட்டைகளும் சீரமைக்கப்பட்டு வருகிறது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. குடிநீர் தேவை மற்றும் நீர் ஆதாரங்களை பாதுகாக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், பட்டா மாறுதல் நடவடிக்கைகள் விரைந்து முடிக்கவும், அம்மா இருசக்கர வாகனம் தகுதி அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கவும், மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் வசதிகள் ஏற்படுத்தி தரவும், சாலை வசதிகள், தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு அறிவித்த திட்டங்கள் முறையாக கிடைக்கப் பெறுகிறதா, வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் செயல்படுத்துதல் மற்றும் விலையில்லா கறவை பசுக்கள், வெள்ளாடுகள் திட்டங்கள் குறித்தும், சமூக நலத்துறையின் மூலம் திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டங்கள் தகுதியான நபர்களுக்கு விரைந்து கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும்,

மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறைகளின் மூலம் வழங்கப்படும் சொட்டுநீர் பாசன திட்டம் விவசாயிகளுக்கு வழங்குவது குறித்தும், கல்வித்துறையின் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பான திட்டங்கள் குறித்தும், சுகாதாரத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு மக்களுக்கு பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. திட்டங்கள் தங்குதடையின்றி மக்களை விரைந்து சென்று சேர வேண்டும். இதற்காக அலுவலர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப்பகுதிகளில் சுத்தமான குடிநீர் தட்டுப்பாடு இன்றி வழங்கவும், மழைக்காலங்களில் நோய் பரவாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜன், திட்ட இயக்குநர் (மகளிர்திட்டம்) லலிதா மற்றும் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**